தொகுதி 1
சித்திரம் 9

பொன்னிவளநாட்டின்
வீர சரித்திரம்

# உத்தமியின் கோபம்



www.ponnivala.com

© 2012 Ponnivala Publishing

பகுதி-1 சித்திரம்-9

# உத்தமியின் சாபம்

வருடங்கள் பல கடந்தும் குன்னுடையானுக்கும், தாமரைக்கும் குழந்தையே பிறக்கவில்லை. இதனால், தாமரை, ஆறுதலுக்காக தன் அண்ணன்களின் குழந்தைகளை பார்த்து வர ஆசைப்பட்டாள். ஆனால், தங்களை அவமானப்படுத்தியவர்களிடம் அவள் செல்வதை குன்னுடையான் விரும்பவில்லை. ஆனாலும், அவள் தன் முடிவில் உறுதியாக இருந்தாள்.












மறுவர்ணணை
பிரெண்டா பெக். இ
கசாண்ரா கொர்நால்

தமிழாக்கம்
சிவசங்கர் நவரட்ணம்
சத்தியபாமா

சித்திரங்கள்
ரவிசந்திரன & குழு

வடிவமைப்பு
பிரியா கோவிந்தராஜன்
ஸ்டெப்பான் ஹானிஹன்

ஓப்பச்சர்
முலர்விழி ராஜ்


வெளியீட்டாளர்
பொன்னிவளா
பப்ளிகேசன்

© 2012
சாப்ட்சைன்ஸ்
அசோசியேசன் லிமிடட்.



திருமணமாகி பல வருஷங்கள் கடந்தும், எனக்கும், என்னை சார்ந்தவர்களுக்கும் குழந்தை பாக்கியமே கிடைக்கவில்லை.
இதனால், ஊரில் அனைவரும் என்மீது வீண்பழி கூறி, ஏளனம் செய்கின்றனர்.
இந்த வேதனையை தாங்க முடியாமல், என் அண்ணன்களின் வீட்டிற்குச்சென்று, அவர்களுடைய குழந்தைகளை பார்த்தாவது, மனதை தேற்றிக்கொள்ள ஆசைப்பட்டேன். ஆனால், என் கணவரோ, குடும்பப்பகை காரணமாக அதைவிரும்பவில்லை.
ஆனாலும்! நான் செல்லத்தான் போகிறேன்.


குன்னுடையான் பொன்னிவளநாட்டை நீதி தவறாது ஆட்சி புரிந்தான்.
தாமரை! நமக்கு குழந்தை இல்லாத நிலையில், நீ உன் அண்ணன்களின் வீட்டிற்கு சென்றால் அவர்கள் உன்னை அவமதிப்பார்கள்.
அத்தோடு வீட்டிற்குள்ளும் விடமாட்டார்கள்.
இது போன்ற அவமானம் நேர அனுமதிக்க மாட்டேன்
இப்பொழுது அவர் கோபத்தில் இருக்கிறார்.
நான் அண்ணன்களின் வீட்டிற்கு சென்று வந்த பிறகு அவரை சமாதானம் செய்யலாம்.


நான் அங்கே செல்லும்போது குழந்தைகளுக்கு ஏதாவது கொண்டு செல்ல வேண்டும்.
தாமரை பெற்கொல்லரிடம் சென்று...
ஆசாரியாரே! என் அண்ணன்களின் குழந்தைகளுக்கு நகைகள் செய்யவேண்டும்.
நல்லது தாயே! என்னென்ன செய்யவேண்டும்.
எனக்கு, இரண்டு ஜோடி அழகான காதணிகளும், வளையல்களும் மேலும்,




தாமரை கூறிய ஆபரணங்களை ஆசாரி செய்யத்தொடங்கினார்.


பின்பு, தாமரை சேவகனை அழைத்தாள்.
நான் வாளவந்திக்கு செல்ல வேண்டும்.
எனக்கு உதவியா ஒரு பெண்ணையும், இரண்டு காவலாளிகளையும் அனுப்ப ஏற்பாடு செய்யுங்கள்.
தாமரை, குன்னனுடையானிடம் விடைபெற வந்தாள்.
நான், எனது அண்ணன்களின் வீட்டிற்குச்செல்ல இருக்கிறேன். விரைவில் திரும்பி விடுவேன்.
தாமரை! நான் எவ்வளவு சொல்லியும் கேட்காமல்...
பிடிவாதமாய் அங்கே போவதென்று முடிவெடுத்துவிட்டாய்?



இல்லை… நான்…சொல்வதை…
டமார்
குன்னுடையான் கோபத்துடன் தான் அமர்ந்திருந்த நாற்காலியை எட்டி உதைத்த படி எழுந்து நின்றார்.
நீ ஒன்றும் சொல்ல வேண்டாம்.
என்னை மதிக்காமல் செல்லும் நீ, மீண்டும் இங்கே வராதே!
ஐய்யோ! உங்கள் வாயால் அப்படி சொல்லாதீர்கள்!
நான் அவர்களின் ஒரே தங்கை! என்னை வெறுக்கமாட்டார்கள்!
போ… என் முன்னே நிற்காதே!
போ! பட்டால்தான் உனக்கு புரியும்!




தாமரை, கணவன் சொல்லை கேட்காமல் வாளவந்திக்கு புறப்படத்தயாரானாள்.
என்ன! அனைவரும் புறப்பட தயாரா!
நான் திரும்பிவரும் வரை, என் கணவரையும், அரண்மனையையும் பார்த்துக் கொள்ளுங்கள்.
தாமரை வேலையாட்களுடன் வாளவந்தியை நோக்கிச் சென்றாள்.
கொழுத்தும் வெயிலில் நீண்டதூரம் நடந்து சென்றனர்.


பெண்ணே! எனக்கு தாகமாக இருக்கிறது.
அருகில் உள்ள குளத்தில் இருந்து தண்ணீர் கொண்டு வருகிறாயா!
தாமரை, அந்தப்பெண் கொண்டு வந்த தண்ணீரைக்குடித்து, தன்னை ஆசுவாசபடுத்திக் கொண்டாள்.



சேவகா!
வாளவந்திக்கு
செல்ல இன்னும் எவ்வளவு
தூரம் இருக்கிறது?
நெருங்கி விட்டோம் தாயே!
அதோ பாருங்கள் கோயில்
கோபுரம் தெரிகிறது!
அப்படியா!
வாருங்கள்!
விரைவாக செல்வோம்!


வாளவந்தியை அடைந்த அவர்கள் அங்கிருந்த விநாயகர் கோவிலில் அமர்ந்தனர்.
பே பே
அங்கே, ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த ஒருவன் அவர்களைப் பார்த்தான்.
அய்யா! யார் நீங்கள்? எங்கேயிருந்து வருகிறீர்கள்?
நாங்கள் காவேரியாறு பாயும் பொன்னிவளாநாட்டிலிருந்து வருகிறோம்.
எங்கே போகிறீர்கள்?
நாங்கள் வாளவந்தியிலுள்ள பெரும் நிலக்கிழார்களை காணவந்துள்ளோம். அவர்களின் அரண்மனைக்கு செல்லும் வழி உங்களுக்கு தெரியுமா?


நன்றாகத் தெரியும்! நான் அவர்களின் வயலில் தான் வேலை செய்கிறேன்.
இவங்க தான் உங்கள் நிலக்கிழார்களின் ஒரே தங்கையான தாமரைக் கவுண்டச்சி!
அண்ணன்களை பார்க்க வந்துள்ளார்!
இந்த பாதைசெல்லும் போக்கில் செல்லுங்கள். அரண்மனையின் பெரிய வாயிலை அடைவீர்கள்.
ஆடு மேய்ப்பவன் சொன்ன வழியில் அவர்கள் நடக்க தொடங்கினார்கள்.
அதேசமயம், ஆடு மேய்ப்பவன் இவர்களுக்கு முன்பாக, குறுக்கு வழியில் அரண்மனைக்கு ஓடினான்.



விரைந்து ஓடிச் சென்ற அவன் அரண்மனை தோட்டத்தில் நின்ற நிலக்கிழார்களின் மனைவிகளை சந்தித்தான்.
ஏன் இப்படி ஓடி வருகிறாய்?
சற்றுமுன் சில வெளியாட்களை விநாயகர் கோவிலில் சந்தித்தேன்.
அவர்கள் பொன்னிவளாநாட்டிலிருந்து வருகிறார்களாம்.
அவர்களில் இருந்த ஒரு பெண்ணின் பெயர் தாமரைக்கவுண்டச்சி. அவர் உங்கள் கணவர்களின் தங்கையாம்.



ஆ! தாமரையா? இங்கே வந்திருக்கிறாளா?
பல வருடங்களுக்கு முன் அண்ணன்களுக்கு பிடிக்காதவனை திருமணம் செய்து சென்றவள்தானே! அவளை ஊரைவிட்டே விரட்டினார்களே!
அவளுக்கு திருமணமாகி பல வருடங்களாக குழந்தை இல்லையாமே!
ம்ம்ம்... இப்போது எதற்கு இங்கே வருகிறாள்?
ஒரு வேளை... அடக்கடவுளே! நம் குழந்தைகளில் ஒன்றை கேட்க வருகிறாளோ?
உடனே ஏதாவது செய்ய வேண்டும்!


அவர்கள் கணவர்களிடம் விரைந்து சென்றனர்.
சீக்கிரம் நம் குழந்தைகளை மறைத்து வைக்க வேண்டும்.
ஏன்? என்ன சொல்கிறாய்?
உங்கள் தங்கை தாமரை இங்கே வருகிறாளாம்!
அவளுக்கு குழந்தையே பிறக்கவில்லையாம்!
அதனால் நிச்சயம் நம் குழந்தைகளில் ஒன்றை கேட்கத்தான் வருகிறாள்.
அவள் சாதாரண பெண் அல்ல, என் தாய் பலகாலங்கள் பெண் குழந்தை இல்லாமல் சிவனை வேண்டி, தவமிருந்து பெற்ற பெண்.
அவளிடம் தெய்வாம்சம் உள்ளதால், கவனமாக இருக்கவேண்டும்.


ஒரு வேளை, அவள் குழந்தையை கேட்டு நாம் கொடுக்காவிட்டால்...
அவள் கட்டாயம் நமக்கு சாபம் இடுவாள்!
ஆ....
இதனால் நம் வம்சமே அழிந்து விடும்!
ம்... என்ன செய்வது?


நாதா! ஒரு பெரிய கூடைக்குள் நம் குழந்தைகளை மறைத்து வைப்போம்!
மனைவி கூறிய யோசனையை ஏற்றுக்கொண்டு சேவகனை அழைத்தார்.
சேவகா எங்கள் தங்கை இங்கே வந்து எங்களை கேட்டால், மந்தப்பூருக்கு வேட்டையாடச் சென்றுவிட்டதாகச் சொல்.
நாங்கள் திரும்பி வர ஆறுமாதங்களுக்கு மேல் ஆகும் என்றும் சொல்லிவிடு.


இரண்டு சகோதரர்களும் கூடையைக் கொண்டு குழந்தைகளை மூடினார்கள்.
அதே நேரம் தாமரை ஊருக்குள் வந்தாள்.
கூட வந்தவர்களை மரத்தடியில் இருக்கச்சொல்லி,
அவள் மட்டும் அரண்மனைக்குச் சென்றாள்.



அரண்மனையின் வாயிலை அடைந்த தாமரை, அங்கே கதவுகள் மூடப்பட்டு அதன் முன்பாக காவலாளி நிற்பதைக் கண்டாள்.





தாமரை ஆவல் மிகுதியால் உள்ளே செல்ல முற்பட்டாள்.
பெண்ணே! பின்னாடி போ!
கதவைத் தொடாதே!
ஆ...
ஐய்யோ!
இதனால் கோபம் அடைந்த காவலாளி இரக்கம் சிறிதும் இன்றி அவளை தாக்கினான்.
விடு... விடு...
ஐய்யோ!


தாக்கப்பட்ட தாமரை நிலைகுழைந்து கீழே விழுந்தாள்.
ஐயோ! கடவுளே! விஷ்ணு! என்னைக் காப்பாற்றுங்கள்.
ஐய்யோ! என் கணவர் கூறியதைக் கேட்காமல் இங்கே வந்து...
இந்த காவலாளியிடம் அடி வாங்கி உடம்பு புண்ணாகி விழுந்து கிடக்கிறேனே!
அடேய் சண்டாளா! எந்த தைரியத்தில் என்னை அடித்தாய்?
பெண்ணே! இங்கிருந்து மரியாதையாக போய்விடு!



கீழே விழுந்தெழுந்த தாமரை கடுங்கோபம் கொண்டாள்.
மூடனே! இப்போது பார்!
சிவனே! திரிபுரங்களை எரித்தவரே!
எனக்காக அக்கினி பந்தை பூமிக்கு அனுப்புங்கள்.
தாமரையின் வேண்டுகோள் தியானத்தில் இருந்த சிவனுக்கு கேட்கவில்லை, ஆனால், அதை விஷ்ணு கேட்டார்.
தாமரை! கணவன் எவ்வளவோ சொல்லியும் கேட்காமல், வாளவந்திக்கு சென்று...
துன்பத்தையும் தேடிக் கொண்டாள்.
நான் சென்று சிவனை பார்க்கவேண்டும்!



விஷ்ணு, தியானத்தில் இருந்த சிவனிடம் வந்தார்.
மைத்துனரே!
உங்கள் தியானத்தை கலைத்ததிற்கு மன்னியுங்கள். பூலோகத்திலிருந்து தாமரை அக்கினிப்பந்தை அனுப்பச் சொல்லி உங்களிடம் கேட்கிறாள்.
அவள் தன் அண்ணன்களைப் பார்க்கச் சென்ற பொழுது, அவளை, காவலாளியை விட்டு அடித்து விரட்டினர்.
அதனால் கோபம் கொண்ட அவள், அக்கினிப்பந்தை கேட்கிறாள்.


சரி! அப்படியே செய்கிறேன்.
சிவன் அக்கினியை அழைத்தார்.
தாமரைக்கு உதவும் படி கூறி பூமிக்கு அனுப்பினார்.
விஷ்ணு சிவனிடம் விடைபெற்றுச் சென்றார்.


பூமியையடைந்த அக்கினிப்பந்தை கைகளில் ஏந்திய தாமரை அதை காவலாளி மேல் ஏவினாள்.
ஊ ...ஊ ...
ஆ......!
இப்போது தெரிகிறதா துன்பத்தின் வலி.
ஐய்யோ எரிகிறதே! நெருப்பை அணையுங்கள்.


சிறிதுநேரத்தில் தாமரை அவனை அக்கினியின் பிடியிருந்து விடுவித்தாள்.
ஐய்யோ!
தயவு செய்து என்னை மன்னித்துவிடுங்கள்.
உங்கள் அண்ணன்கள் தான் இப்படி செய்யச் சொன்னார்கள். எனக்கு ஒன்றும் தெரியாது தாயே.
அவர்கள் மந்தப்பூருக்கு வேட்டையாடச் சென்றுவிட்டார்கள் என்று சொன்னாயே?
அப்போ! அவர்கள் வேட்டைக்கு செல்லவில்லை? உள்ளே தான் இருக்கிறார்கள். நீ என்னிடம் பொய் சொல்லியிருக்கிறாய்!
இல்லை தாயே! அந்த சண்டாளர்கள் தான் என்னை அப்படி சொல்லச் சொன்னார்கள்.
அம்மா! என்னை மன்னித்து விடுங்கள்.


காவலாளி கூறியதைக் கேட்ட தாமரை கோபங் கொண்டாள்.
பாவிகளே! உள்ளே இருந்து கொண்டு இல்லையென்றதும் இல்லாமல் ஆளைவிட்டுமா அடிக்கிறீர்கள்!
சண்டாளர்களே! இருங்கள்! உங்களுக்கு சரியான பாடம் புகட்டுகிறேன்.
கோபங்கெண்ட தாமரை சாபம் இட்டால்.
உங்கள் குழந்தைகள் அனைவரும் இறந்து போவார்கள்.
அத்தோடு ஐந்து தலைமுறைக்கு குழந்தையே பிறக்காது.
தாமரையின் சாபத்தின் காரணமாக குழந்தைகள் அனைவரும் இறந்தனர்.


பின்னர் தாமரை தன்னுடைய வேலைக்காரர்களிடம் சென்றாள்.
காவலாளிகளே! நகை மற்றும் திண்பண்டம் இருக்கும் பெட்டியை எடுங்கள்.
இவைகளை இந்த ஊரில் உள்ள குழந்தைகளை அழைத்து வந்து கொடுங்கள்.
குழந்தைகளே! எங்கள் எஜமானி உங்களை கூப்பிடுகிறார்.
சேவகன் அழைத்து வந்த குழந்தைகளை தாமரை மகிழ்ச்சியுடன் வரவேற்றாள்.
வாருங்கள் வாருங்கள்!
இங்கிருக்கும் அனைத்தையும் உங்கள் வீட்டிற்கு எடுத்துச்செல்லுங்கள்.



அடுத்து தாமரை ஊரில் உள்ள கொத்தனார்களை அழைத்தாள்.
கொத்தனார்களே! இரண்டடி அகலமும் நான்கடி நீளமும் கொண்ட இரண்டு கற்களை கொண்டு வந்து..
கோவிலின் தென்புறத்தில் ஒரு கல்லை நிலத்தில் கிடையாக போட்டு அதன் மேல் மற்றயதை நிறுத்துங்கள்.
தாமரையின் வேண்டுதலின் படி கற்கள் ஒட்டிக்கெண்டன.
காஞ்சிநாதா! இந்த இரண்டு கற்களும், ஒன்றோடு ஒன்று ஒட்டிக் கொள்ள வேண்டும்.
இப்போது நான் சொல்வதை இதில் எழுதுங்கள்!
“வாளவந்தியில் உள்ளவர்கள் யாரும் நிழக்கிழார்கள் வீட்டில் மணமுடிக்கக்கூடாது.“


நான் காளி கோவிலுக்கு சென்று வருகிறேன்.
தாமரை அங்கே இருந்த காளி கோயிலுக்கு சென்றாள்.
தாமரை செல்வதற்கு முன்பாக கோயிற்கதவு தானாக மூடிக்கொண்டது.
காளியாத்தா! கூடப்பிறந்தவர்கள் தான் அடித்து அவமானப்படுத்துகிறார்கள் என்றால்... .
நீயுமா! என்னை பார்த்ததும் ஓடி ஒளிந்து கொண்டாய்?


கோயிலின் முன்பாக தாமரை துக்கம் மிகுதியால் கண்ணீர் விட்டுஅழுதாள். இதனால் மனமுருகிய காளி தாமரையை கான வெளியில் வந்தாள். தாமரை மிகவும் பணிவுடன் காளியை வணங்கினாள்.
தாமரை! நீ பொன்னிவளநாட்டில் இருந்து இங்கு வந்தது எனக்குத் தெரியாது.
உன்னை பார்த்து பலவருடங்கள் ஆகிவிட்டது.
ஆம் தாயே! அதுதான் உங்களை பார்க்க வந்துள்ளேன்.



தாமரை தனக்கு நடந்த அனைத்து கொடுமைகளையும் காளியிடம் கூறினாள்.
உன் சொந்த அண்ணன்களா இப்படி எல்லாம் நடந்து கொண்டார்கள்!
என்னால் இதை நம்ப முடியவில்லை.
நம்பமுடியாவிட்டால் என் உடம்பில் உள்ள காயங்களை பாருங்கள்.
அந்த இரக்கமற்றவர்களால் எவ்வாறு இதை செய்யமுடிந்தது!
பாவம் தாமரை! அதிகம் வேதனைப் பட்டிருக்கிறாள். எவ்விதம் நான் அவளுக்கு உதவுவது.


தாமரையின் தலையெழுத்தை எண்ணி வருந்திய காளி அமைதியாக யோசித்தாள்.
தாமரையின் சாபத்தால் அவளுடைய அண்ணன்களுக்கு என்ன நடக்கும்? அவளுக்கு வாளவந்தியில் நடந்தது குன்னுடையானுக்கு தெரிந்தால் அதன் விளைவு? காளியால் இந்த அப்பாவி பெண்ணுக்கு ஏதும் நன்மை செய்ய முடியுமா?

# பொன்னிவளாவை பற்றி ஒரு சிறு தொகுப்பு

பொன்னிவளா ஒரு புரதான பண்டை கால கதை. இக்கதை கிராமத்து உடுக்கை பாடகர்களால் இன்றும் ஆடலும், பாடலுமாக சொல்லப்படும் ஒரு பழங்கதையாகும்.

1965 வருடம் கொங்கு நாட்டில் உள்ள மின்வசதி இல்லாத சிறு கிராமத்தில், ஒலி நாடாவை கொண்டு, 18 இரவுகளில் ஒலி பதிவு செய்யப்பட்ட கதையாகும். முதன் முறையாக, கம்யூட்டர் 2D அனிமேஷனில் 26 தொலைக்காட்சி தொடர்களாக ஊருவாக்கப்பட்டு, பல மொழிகளில் பதிவு செய்யப்பட்டது.

ராஜாங்கம் என்பது அதன் மக்களால்தான் கட்டமைக்கப்படுகிறது. உதாரணமாக குடையுன் பரந்து விரிந்த மேல்பகுதி ராஜாங்கம் என்றால், மக்கள்தான் அதனை தாங்கி நிற்கும் கம்பிகள்.

எனவே ஒரு ராஜாங்கத்தைப்பற்றி சொல்லவேண்டும் என்றால், அந்த ராஜாங்கத்தின் மக்களை பற்றியும் சொல்லவேண்டும். அப்போதுதான் அந்த ராஜாங்கத்தைப்பற்றி முழுமையாக புரிந்து கொள்ள முடியும். இக்கதை கொங்கு மக்களின் கதை. இக்கதை தோராயமாக ஆறாம் நூற்றாண்டில் கொங்கு மக்களின் வாழ்க்கை முறையையும், அவர்களின் சமுதாய மற்றும் நாகரீக வாழ்க்கையையும் சித்தரிக்கிறது.



மேலும் பொன்னிவளாவைப்பற்றி விபரம் அறிய பொன்னிவள இணைய தளத்திற்கு செல்லுகள்
www.ponnivala.com/comic9tamil




வாருங்கள்!

# பொன்னிவள

அங்காடிக்கு

சித்திரக்கதை - HD அனிமேஷன் - விளையாட்டு - வாணிக பொருட்கள் - கேளிக்கை - மேலும் பல இலவசங்கள்!








01. காராளர் தோற்றம்
02. அநாதைச்சிறுவன்
03. நாடு கடத்தல்
04. உரிமையுள்ள காதலி
05. அதிசய கல்யாணம்
06. வருத்த விதை
07. ஆயிரம் யாசகர்கள்
08. கொடிய சாபம்
09. உத்தமியின் கோபம்
10. விரக்தியுன் பலன்
11. சாப நிவர்த்தி
12. சொர்க வாசல்
13. விதியின் கணக்கு
14. கோவில் ரகசியம்
15. உண்மை தெரிந்தது
16. நாடு திரும்புதல்
17. மானம் பெரிதென்று
18. சினம் கொண்ட சின்னவர்
19. சுதந்திரம் வென்றது
20. ஆசீர்வதிக்கப்பட்ட வாள்
21. சாம்புகனின் தந்திரம்
22. புதிய சவால்
23. நேருக்கு நேர்
24. எதிரியின் சவால்
25. பெரும் தியாகம்
26. ஒரு சகாப்தம் முடிந்தது


26யும் பெற்றுகொள்ள!


ISBN 978-1-927093-50-4


www.ponnivalamarket.com
மேலும் விபரங்களுக்கு இணைய தளத்திற்கு செல்க:
www.ponnivala.com


© 2012 Ponnivala Publishing